**ஆளுகைச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

**2024 மே 03 நிதித்தொழில் சட்டப் பணிப்புரைகள் 2024இன் 02ஆம் இலக்கம்**

# கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம்

**1. சட்ட ஏற்பாடுகள்**

1.1 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 133(1)ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 12ஆம் பிரிவின் நியதிகளின்படி, இலங்கை மத்திய வங்கி 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் உரிமம்பெற்ற ஒவ்வொரு நிதிக் கம்பனிக்கும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவம் தொடர்பில் இத்தால் இப்பணிப்புரைகளை விடுக்கின்றது.

**2. பணிப்புரைகளின் குறிக்கோள்கள்**

2.1 கொடுகடன் இடர்நேர்வினை அடையாளம் காணுதல், அளவிடுதல், கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் என்பனவற்றிக்காக காத்திரமான முறைமையொன்று இருப்பதை உறுதிசெய்தல், முன்மதியுடைய வரையறைகள் மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம், கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை, கொடுகடன் இடர்நேர்வு ஆளுகை அமைப்பு உள்ளிட்டவற்றை உருவாக்குவதன் மூலம் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை நிறுவுதல்.

**3. ஏற்புடைத்தன்மை**

3.1 இப்பணிப்புரைகள், ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பிற்கான முக்கிய கோட்பாடுகளை குறிப்பிடுவதுடன் இப்பணிப்புரையில் தரப்பட்டுள்ள கோட்பாடுகளையும் நடைமுறைகளையும் நிதிக்கம்பனிகள் பின்பற்றுதல் வேண்டும்.

3.2 இப்பணிப்புரைகள் 2025.01.01 இலிருந்து நடைமுறைக்கு வருதலாதல் வேண்டும்.

**4. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு**

4.1 கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பானது நிதிக் கம்பனிகளின் நீண்டகால நிலைபெறுதன்மையின் இன்றியமையாத அங்கமாக தொடர்ந்தும் இருத்தல் வேண்டும் என்பதுடன் கொடுகடன் இடர்நேர்வினை[1] மதிப்பிடுவதற்கான முழுமையான அணுகுமுறையொன்றினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

4.2 நிதிக் கம்பனியின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு குறைந்தபட்சம் பின்வரும் கூறுகளையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

அ) கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம் மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை;

ஆ) கொடுகடன் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு; அத்துடன்

இ) கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறை.

4.3 **கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம் மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை**

**அ) கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம்**

[1] கொடுகடன் இடர்நேர்வு என்பதன் கருத்து நிதிக் கம்பனியொன்றின் கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினர் உடன்படிக்கையிலுள்ள இணங்கிக்கொள்ளப்பட்ட நியதிகளுக்கிணங்க அதன் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்ய தவறுவதனால் ஏற்படக்கூடிய இழப்பாகும்.

i. நிதிக் கம்பனியொன்று, நிதிக் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட வியாபார இலக்குகள் மற்றும் இடர்நேர்வுக் கூற்றின் நியதிகளின்படி அதன் கொடுகடன் இடர்நேர்வினை தாங்கும் மட்டம் என்பனவற்றுடன் இசைந்துசெல்லும் விதத்தில் அதன் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயத்தினை உருவாக்குதல் வேண்டும்.

ii. குறைந்தபட்சம், கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம் பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு, கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கான நிதிக் கம்பனியின் விருப்பத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்:

   அ) வெளிப்படுத்துகை வகை (உதாரணமாக வர்த்தகம், வாடிக்கையாளர், உண்மைச் சொத்து போன்றவை) மற்றும் வரையறைகள்;

   அ) பொருளாதாரத் துறை/ நடவடிக்கைகள்;

   இ) புவியியல் ரீதியான அமைவிடம்;

   ஈ) நாணயம்; மற்றும்

   உ) முதிர்ச்சி.

iii. நிதிக் கம்பனியானது கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம் அதன் தன்மையில் நீண்டகாலத்தினைக் கொண்டது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன் பொருளாதாரத்தின் சுழற்சி வட்ட அம்சங்களையும் ஒட்டுமொத்த கொடுகடன் சொத்துப்பட்டியலின் உள்ளமைப்பு/ தரத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் கவனத்தில் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**ஆ) கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை**

i. நிதிக் கம்பனி அதன் கொடுகடன் வசதிகளை வழங்கி அதனை முகாமைப்படுத்துவதனையும் புதிய வியாபார வாய்ப்புக்களை மதிப்பிடுவதனையும் இயலுமைப்படுத்துகின்ற அனைத்தையும் உள்ளடக்கிய கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையினை உருவாக்கி நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

ii. அத்தகைய கொள்கை நன்கு வரையறை செய்யப்பட்டதாகவும், ஆவணப்படுத்தப்பட்டு பணிப்பாளர் சபையினால் சரியான முறையில் ஒப்புதலளிக்கப்பட்டதாகவும் மிகச்சிறந்த நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடன் இசைந்து செல்வதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் நிதிக் கம்பனிகளின் நடவடிக்கைகளது தன்மை மற்றும் சிக்கலான தன்மைகளுக்குப் போதுமானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன் ஆண்டுதோறும் மீளாய்வு செய்யப்படுதலும் வேண்டும்.

iii. நிதிக் கம்பனிகளின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

அ) பணிப்பாளர் சபை மற்றும் மூத்த முகாமைத்துவத்தின் வகிபாகம், பொறுப்பாண்மை மற்றும் பொறுப்புக்கூறலின் நிலை மட்டம்;

ஆ) முகாமைத்துவம் மற்றும் அலுவலர்களின் பல்வேறு மட்டங்களுக்கும் கொடுகடன் அதிகாரத்தினை (பிறழ்வுகள் மற்றும் விதிவிலக்குகளுக்கு ஒப்புதலளிக்கின்ற அதிகாரம் உட்பட) வழங்குதல்;

இ) நிதிக் கம்பனி ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்பட்ட கொடுகடன் வசதிகளின் வகை;

ஈ) கடன்பாட்டாளர்கள்/ இணைத்தரப்பினர்கள் தொடர்பான கடன்தொகைகளின் வரையறைகள், கடன்பாட்டாளர்களின் குழுமம், பொருளாதாரத் துறைகள்/ நடவடிக்கைகளுக்கு வழங்கப்பட்ட கடன், புவியியல் பிராந்தியங்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணையங்கள் உட்பட நிதிக் கம்பனிகள் அதன் சொத்துப்பட்டியலுக்குகெதிராக கொடுகடன் இடர்நேர்வுகளை ஏற்றுக்கொள்ளவிரும்பும் அளவு;

உ) எல்லோரையும் சமமாக மதிக்கின்ற அடிப்படை மற்றும் அக்கறைகளின் முரண்பாடுகள் அற்ற தன்மை என்பனவற்றை பரிசீலனையில் கொண்டு கடன்பாட்டாளர் குழுமத்திற்கு கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கான நடைமுறைகள்;

ஊ) புதிய கொடுகடன் வசதிகளை அறிமுகப்படுத்தும் போது மேற்கொள்ளப்படவேண்டிய பகுப்பாய்வுகள் தொடர்பான விபரங்கள்;

எ) கொடுகடன் முகாமைத்துவ செய்முறையின் ஒவ்வொரு கட்டத்திலும் தேவைப்படும் ஆவணங்களின் பட்டியல்;

ஏ) கொடுகடன் இடர்நேர்வினைத் தணிப்பதற்கான உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான விபரங்கள்; மற்றும்

ஐ) பெறுமதி இழப்புக் கடன்களை எவ்வாறு முகாமைப்படுத்தல் வேண்டும் மற்றும் இத்தொழிற்பாட்டினை முகாமைப்படுத்துவதற்குப் பொறுப்பான அலுவலர்கள் தொடர்பான விபரங்கள்.

iv. முன்மதியுடைய வரையறைகள் உட்பட, கொடுகடன் இடர்நேர்வு தணிப்பு உபாயங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் மிகையான கொடுகடன் இடர்நேர்வுகளை ஏற்பதனை தவிர்ப்பதற்கு கொடுகடன் வசதிகளை வழங்குவதில் தொடர்புபட்ட தரப்பினர்களை

அடையாளம் காண்பதற்கான கொள்கைகள் நடைமுறைகளை உருவாக்க நிதிக் கம்பனி ஊக்குவிக்கப்படுகிறது.

**4.4 கொடுகடன் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பு**

அ) காத்திரமான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்புக்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக நிதிக் கம்பனி ஆற்றல்வாய்ந்த கொடுகடன் இடர்நேர்வு ஆளுகைக் கட்டமைப்பொன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ) பணிப்பாளர் சபை/ சபையின் துணைக் குழு, நிதிக் கம்பனியின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை மேற்பார்வை செய்வதில் இன்றியமையாத வகிபாகமொன்றினை ஆற்றுதல் வேண்டும். பணிப்பாளர் சபை/ அதன் துணைக் குழுவின் பொறுப்புக்கள் குறைந்தபட்சம் பின்வருவனவற்றை உள்ளடக்கியிருத்தல் வேண்டும்:

i. ஆவணப்படுத்தப்பட்ட கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயமொன்றினை உருவாக்குதல்;

ii. மூத்த முகாமைத்துவத்தினால் உருவாக்கப்பட்ட கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைக்கு ஒப்புதலளித்தல் மற்றும் மீளாய்வு செய்தல்;

iii. நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட கொடுகடன் வசதிகளை முகாமைப்படுத்துவதில் மூத்த முகாமைத்துவம் முழுமையான இயலாற்றலை கொண்டிருக்கின்றது என்பதனையும் அத்தகைய நடவடிக்கைகள் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம் மற்றும் கொள்கைகளுக்குள் மேற்கொள்ளப்படுவதனையும் உறுதிப்படுத்துதல்;

iv. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயமும் கொள்கையும் நிதிக் கம்பனி முழுவதிலும் காத்திரமான விதத்தில் தொடர்பூட்டப்பட்டிருப்பதனையும் நிதிக் கம்பனியிலுள்ள அதனுடன் தொடர்புடைய அலுவலர்கள் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தினை அணுகும் முறை நிறுவப்பட்டுள்ளமையை அறிந்திருக்கின்றார்கள் என்பதனையும் உறுதிப்படுத்துதல்;

v. எடுக்கப்படுகின்ற இடர்நேர்வுகள் இணங்கப்பட்ட உள்ளக கொள்கைகளுக்கமைய மேற்கொள்ளப்படுவதனை கண்காணிப்பதற்காக, முகாமைத்துவத்திற்கு அறிக்கையிடல் மற்றும் உள்ளகக் கணக்காய்வு உள்ளிட்ட போதுமான கட்டுப்பாடுகள் நடைமுறையிலுள்ளமையினை உறுதிப்படுத்துதல்;

vi. ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் பின்பற்றப்படுவதனைக் கண்காணித்தல்; மற்றும்

vii. தோற்றம்பெற்றுவரும் இடர்நேர்வுகளை அடையாளம் காணும் பொருட்டு பாதுகாப்பற்ற கொடுகடன் சொத்துப்பட்டியலிலுள்ள இயக்கவாற்றல் உள்ளிட்ட சூழ்நிலைகளின் அடிப்படையில் நிதிக்

கம்பனியினால் நடத்தப்பட்ட பகுப்பாய்வினையும் அழுத்தப்பரீட்சிப்புக்களையும் மீளாய்வு செய்தல்.

இ) நிதிக் கம்பனியின் மூத்த முகாமைத்துவம்/ மூத்த முகாமைத்துவ மட்டத்திலான குழு பின்வருவனவற்றிற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்:

i. பணிப்பாளர் சபை/ சபைத் துணைக் குழுவினால் உருவாக்கப்பட்ட கொடுகடன் இடர்நேர்வு உபாயத்தினைப் பின்பற்றுதல்;

ii. ஆவணப்படுத்தப்பட்ட கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கை மற்றும் நடைமுறைகளை உருவாக்குதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்;

iii. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறைகளில் ஈடுபட்டுள்ள அலுவலர்களுக்கு கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயம் மற்றும் கொள்கையைப் பரப்புகின்ற தொடர்பூட்டல் முறைமையினை நிறுவுதல்;

iv. ஒழுங்குமுறைப்படுத்தல், மேற்பார்வை மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுடன் இணங்கிக்கொள்ளல்;

v. கொடுகடன் இடர்நேர்வுகளை தணிக்கும் விதத்தில் போதுமான உள்ளகக் கட்டுப்பாடுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்துதல்; மற்றும்

vi. பொருத்தமான முகாமைத்துவத் தகவல் முறைமைகளை உருவாக்குதல் மற்றும் பணிப்பாளர் சபைக்கு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்.

ஈ) நிதிக் கம்பனியானது மூன்று (03) அடுக்குப் பாதுகாப்புப் பொறிமுறையொன்றினூடாக கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தின் நாளாந்த பொறுப்பை தொழிற்பாட்டு மட்டமொன்றிற்கு குறைத்தல் வேண்டும்.

i. வியாபார அலகுகளின் தலைவர்கள் மற்றும் கிளை முகாமையாளர்கள் அவர்களது வியாபார நடவடிக்கைகளிலிருந்து நாளாந்தம் எழுகின்ற கொடுகடன் இடர்நேர்வுகளை அடையாளம் கண்டு முகாமைப்படுத்துவதற்கும் ஒப்புதலளிக்கப்பட்ட இடர்நேர்வு மற்றும் முகாமைத்துவ கொள்கைகளைத் தொழிற்படுத்துவதற்கும் பொறுப்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ii. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவத்தினையும் கட்டுப்பாட்டுத் தொழிற்பாட்டினையும் கையாள்கின்ற பிரிவு/ திணைக்களம் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பு நடைமுறைப்படுவதனை காத்திரமான விதத்தில் கண்காணித்து, நிதிக் கம்பனி முழுவதிலும் இடர்நேர்வு விழிப்புணர்வுக்கு வசதியளித்து அளவீடு மற்றும் கண்காணிப்பு முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் மூத்த

முகாமைத்துவத்தினருக்கும் பணிப்பாளர்சபைக்கும் அறிக்கையளித்தலும் வேண்டும்.

iii. நிதிக் கம்பனியின் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் அக்கொள்கைகள் இணங்கிக்கொள்ளப்படுகின்றனவா என்பது உட்பட உள்ளகக் கணக்காய்வுக் குழு சுயாதீனமான பரீட்சிப்புக்களை காலாந்தர முறையில் மேற்கொண்டு, கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கட்டமைப்பினை சரிபார்த்தல் வேண்டும்.

4.5 **கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறை**

காத்திரமான கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவச் செயல்முறையானது எந்தவொரு கொடுகடன் வசதியுடன் பின்னிப்பிணைந்திருக்கும் சாத்தியமான இடர்நேர்வுகளை அடையாளம் காண்பதனையும் மதிப்பிடுவதனையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குறைந்தபட்சம், இச்செயல்முறை நிதிக் கம்பனி பின்வருவனவற்றை அணுகும் விதத்தில் வழிமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.

**அ) கொடுகடன் வசதிகளை மதிப்பிடுதல் மற்றும் ஒப்புதலளித்தல்**

i. கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பின் இடர்நேர்வு விபரங்களை மதிப்பீட்டிற்காக நிதிக் கம்பனிக்கு போதுமான தகவல்களைப் பொற்றுக்கொள்வதை நிதிக் கம்பனி உறுதிப்படுத்தல் வேண்டும்.

ii. கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினரின் கொடுகடன் நம்பகத்தன்மையினை மதிப்பிடுவதற்கு நிதிக் கம்பனியானது உள்ளக தரமிடல் முறைமை/கொடுகடன் இடர்நேர்வு புள்ளியிடும் முறைமையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய முறைமை நிதிக் கம்பனியின் நடவடிக்கைகளின் தன்மை, அளவு மற்றும் சிக்கல்வாய்ந்த தன்மை என்பனவற்றுடன் இசைந்துசெல்வதாகவும் இருத்தல் வேண்டும்.

iii. ஒரே விதமான பண்புகளை அடிப்படையில் (உ-ம்: அடகு பிடித்தல்/ நுண்பாக நிதி) கடன்பாட்டாளர் பிரிவுகளுக்கு வேறுபட்ட கொடுகடன் இடர்நேர்வு புள்ளியிடும் முறைமையினை பிரயோகிக்க முடியும்.

iv. கொடுகடன் இடர்நேர்வினை மதிப்பிடுவதற்கும் கொடுகடன் தீர்மானிக்கும் செய்முறை உத்வேகம் மிக்க முறையில், சரியான நேரத்தில் காத்திரமான விதத்தில் மேற்கொள்ளப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கும் போதுமான அறிவாற்றல், தேர்ச்சி மற்றும் அனுபவத்துடன்கூடிய அலுவலர் குழவை நிதிக் கம்பனி கொண்டிருத்தல் வேண்டும்.

v. கடன்பாட்டாளரொருவரை மதிப்பிடும் போது நிதிக் கம்பனியானது குறைந்தபட்சம் பின்வருவனவற்றை பரிசீலனையில் கொள்ளுதல் வேண்டும்:

(அ) கொடுகடன் வசதியின் நோக்கம் மற்றும் மீள்கொடுப்பனவின் மூலங்கள்;

(ஆ) கொடுகடன் வசதியின் முன்மொழியப்பட்ட நியதிகள்;

(இ) பிணையத்தின் வகை மற்றும் பெறுமதி;

(ஈ) கடன்பாட்டாளர்களைக் கொண்ட குழுவினரிடையே கடன்பாட்டாளரை/ இணைத்தரப்பினரை அடையாளம் காணமுடிந்ததா; அத்துடன்

(உ) கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினரின் இடர்நேர்வு விபரங்களை அடிப்படையாகக் கொண்டு கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினரின் உள்ளக இடர்நேர்வுகளைத் தரமிடல்/ கொடுகடன் இடர்நேர்வுகளுக்கு மதிப்பீட்டு புள்ளியிடல்.

**ஆ) கொடுகடன் நிர்வாகம்**

நிதிக் கம்பனியின் கொடுகடன் நிர்வாகத் தொழிற்பாடுகள், கொடுகடன் வசதிகளை வழங்குவதிலும் அவற்றைப் பேணுவதிலும் ஆதரவளிப்பதாக இருத்தல் வேண்டும். நிதிக் கம்பனியின் கொடுகடன் நிர்வாகத் தொழிற்பாடுகள் பின்வருவனவற்றை உறுதிப்படுத்தல் வேண்டும்.

அ) "பின்னரங்கு அலுவலகத்தினை" கட்டுப்படுத்துவது தொடர்பான நடைமுறைகள் போதுமானதாக இருப்பதனை;

ஆ) கடமைகள் போதுமானளவிற்கு வெவ்வேறாகப் பிரிக்கப்பட்டிருப்பதனை;

இ) முகாமைத்துவ தகவல் முறைமைக்கான தகவல்கள் துல்லியமான விதத்திலும் சரியான நேரத்திலும் வழங்கப்பட்டிருப்பதனை; மற்றும்

ஈ) ஆவணப்படுத்தல்கள், ஒப்பந்த ரீதியான தேவைப்பாடுகள், சட்ட பூர்வமான ஒப்பந்தங்கள்/ உடன்படிக்கைகள், பிணையங்கள் போன்றன உள்ளிட்ட கொடுகடன் நிர்வாக தொழிற்பாடுகளின் வினைத்திறன் மற்றும் காத்திரமான தன்மை போன்றனவற்றை.

**இ) கொடுகடன் வசதிகளை அளவிடுதல்**

i. இலங்கை கணக்கீட்டு நியமங்கள், இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் 2020ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதித்தொழில் சட்டப் பணிப்புரை - கொடுகடன் வசதிகளை வகைப்படுத்தல் மற்றும் அளவிடுதல் அல்லது திருத்தப்பட்டவற்றுடன் இணைந்துசெல்லும் விதத்தில், நிதிக் கம்பனி அனைத்து கொடுகடன் வெளிப்படுத்துகை தொடர்பிலும் இடர்நேர்வுகளை மதிப்பிடுவதற்காக பொறிமுறையொன்றினை நிறுவுதல் வேண்டும்.

ii. குறைந்தபட்சம், தனிப்பட்ட ஆளின் மட்டத்தில், அல்லது, சொத்துபட்டியல் மட்டத்தில் நிதிக் கம்பனிக்கு செலுத்தத்தவறும் நிகழ்தகவு, இழப்புக்களை ஏற்படுத்தும் செலுத்தத்தவறுதல் மற்றும் செலுத்தத்தவறுதலின் வெளிப்படுத்துகை என்பனவற்றின் மூலம் ஏற்படக்கூடிய சாத்தியமான இழப்புக்களை கணிப்பதன் மூலம் நிதிக் கம்பனி எதிர்பார்க்கப்படும் கொடுகடன் இழப்புக்களை மதிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் ஏற்புடைத்தான கணக்கீட்டு

நியமங்களுக்கிணங்க, அத்தகைய அளவுகள் சரியான நேரத்தில் அங்கீகரிக்கப்படுதலும் வேண்டும்.

iii. கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயங்களை மற்றும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கையை உருவாக்குதல்/ மீளாய்வு செய்தல் குறிப்பாக, கொடுகடன் வசதியொன்றிற்கு ஒப்புதலளிக்கும் துறையிலுள்ள கொள்கை, விலையிடல், வரையறைகளை நிர்ணயித்தல், கொடுகடன் பெறுமதி இழப்புக் கடன்களையும் கொடுகடன் இழப்புப் படிகளையும் அடையாளம் காணுதல் என்பன தொடர்பில் கொடுகடன் இடர்நேர்வு அளவீட்டு முடிவுகளை நிதிக் கம்பனி சரியான முறையில் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**ஈ) கொடுகடன் வசதிகளைக் கண்காணித்தல்**

i. நிதிக் கம்பனி, தனியாள் கடன்பாட்டாளர், இணைத்தரப்பினருக்கான வெளிப்படுத்துகைகள் மற்றும் சாதனங்கள், துறை மற்றும் பிணையுறுதி மட்டங்கள் என்பனவற்றுடன் தொடர்பான கொடுகடன் இடர்நேர்வினை கண்காணிப்பதையும் மதிப்பிடுவதனையும் இயலுமைப்படுத்துகின்ற முறைமையொன்றினைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், பிணையிடப்படாத கொடுகடன் சொத்துப்பட்டியல் மேலேயுற்ற 4.4 ஆ) vii இல் தேவைப்படுத்தப்பட்டவாறு, பணிப்பாளர் சபை/ சபையின் துணைக்குழுவினால் கூடியளவிற்கு அடிக்கடி மீளாய்விற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

ii. நிதிக் கம்பனி அதன் கொடுகடன் சொத்துப்பட்டியலையும் அதனுடன் இணைந்த வேறுஏதேனும் கொடுகடன் இடர்நேர்வுகளையும் அனைத்தையும் விரிவாக கண்காணிப்பதற்கு நிதிக் கம்பனிக்கு உதவும் பொருத்தமான முகாமைத்துவத் தகவல் முறையினை உருவாக்க வேண்டும். முகாமைத்துவத் தகவல் முறைமையிலிருந்து உருவாக்கப்படுகின்ற தகவல்களை பணிப்பாளர் சபையினாலும் மூத்த முகாமைத்துவத்தினாலும் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு பயன்படுத்தல் வேண்டும் என்பதுடன் இது தொடர்ந்தியங்கும் கொடுகடன் இடர்நேர்வுகளின் மதிப்பீட்டினையும் வசதிப்படுத்தும்.

iii. நிதிக் கம்பனியானது, நிதிக் கம்பனியின் சாத்தியமான நிகழ்வுகள் அல்லது அதன் கொடுகடன் வெளிப்படுத்துகை மீது பாதகமான தாக்கங்களைக் கொண்டிருக்கக்கூடிய பொருளாதார நிலைமைகளில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை அடையாளம் காண்பதற்கான அழுத்தப் பரீட்சிப்புக்களை மேற்கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய மாற்றங்களை எதிர்த்து நிற்பதற்கான இயலாற்றலையும் நிதிக் கம்பனி கொண்டிருத்தல் வேண்டும்.

iv. காத்திரமான கொடுகடன் கண்காணிப்புச் செயன்முறை பின்வருவனவற்றை உறுதிப்படுத்துதல் வேண்டும்:

அ) கிரமமான இடைவெளிகளில் கடன்பாட்டாளர்கள்/ இணைத்தரப்பினரின் நிதியியல் நிலைமைகளை புதுப்பித்தல்;

ஆ) பொருத்தமானவிடத்து, கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினரின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் பிணையுறுதி பாதுகாப்பு மதிப்பிடுதல்;

இ) நிலுவையிலுள்ள ஒப்பந்த ரீதியான கொடுப்பனவுகளை அடையாளம் காணுதல் மற்றும் சரியான நேர அடிப்படையில் கொடுகடன் பெறுமதி இழப்பு கடன்களாக வகைப்படுத்தல்;

ஈ) நிதிக் கம்பனியின் உள்ளக இடர்நேர்வு தரமிடல் அல்லது கொடுகடன் இடர்நேர்வு புள்ளியிடல் அடிப்படையில் கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினரின் புதுப்பிக்கப்பட்ட நிதியியல் நிலைமை பிரதிபலிக்கப்படுவதனை; மற்றும்

உ) கொடுகடனின் தரத்தினை கண்காணித்தல், கடன்பாட்டாளர்/ இணைத்தரப்பினருடன் கிரமமான தொடர்புகளைப் பேணுதல் மற்றும் பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

v. கொடுகடன் பெறுமதி இழப்புக் கடன்களின் முகாமைத்துவம் நிதிக் கம்பனியினால் கட்டமைக்கப்பட்ட, இலக்கிடப்பட்ட விதத்தில் நிதிக் கம்பனியினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் அளவிடல் பெறுபேறுகளை மேம்படுத்துகின்ற நோக்குடன் மற்றும் நிதிக் கம்பனியின் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவ உபாயத்தினையும் கொடுகடன் இடர்நேர்வு முகாமைத்துவக் கொள்கைகளையும் மேம்படுத்தக்கூடிய பின்னூட்டல்களையும் வழங்குதல் வேண்டும்.

vi. நிதிக் கம்பனியின் பதிவழித்தல் சரியான நேரத்தில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் யதார்த்த பூர்வமான மீள்கொடுப்பனவுகளும் அறவிடல் எதிர்பார்ப்புக்களும் பிரதிபலிக்கப்படுதல் வேண்டும். குறைந்தபட்சம், நிதிக் கம்பனி பணிப்பாளர் சபையினால் ஒப்புதலளிக்கப்பட்ட பதிவழித்தல் கொள்கையின் அடிப்படையில் கொடுகடன் வசதிகளை பதிவழிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளையும் நிபந்தனைகளையும் ஒப்புதலளிக்கின்ற அதிகாரியையும் குறித்துரைத்தல் வேண்டும் என்பதுடன் பதிவழிக்கின்ற கொடுகடன் வசதிகள் தொடர்பில் போதுமான தகவல்களை பேணுதலும் வேண்டும்.

## 5. கடன் வசதிகளை வழங்குதல்

5.1 எந்தவொரு நிதிக் கம்பனியும் பின்வருவனவற்றிற்கு கடன் வசதிகளை வழங்கக்கூடாது.

அ) இதன் உடமைக் கம்பனி அல்லது இறுதியான தாய்க்கம்பனி அல்லது நிதிக் கம்பனி மீது கணிசமான அக்கறைகளை ஏற்படுத்துகின்ற ஏதேனும் மற்றைய தரப்பினருக்கு.

ஆ) இதன் சொந்தப் பங்குகளின் பிணையங்கள் மீது அல்லது ஏதேனும் இதன் துணைக் கம்பனிகளின் அல்லது இதன் உடமைக் கம்பனி அல்லது இறுதியான தாய்க் கம்பனியின் பங்குகளின் பிணையங்கள் மீது;

இ) இதன் சொந்தப் பங்குகளை கொள்வனவு செய்வதற்கு; அல்லது

ஈ) நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவரின், நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவரது உறவினரின், அல்லது, நிதிக் கம்பனியின் எவரேனும் ஊழியரின் உத்தவாதத்தின் மீது அல்லது நட்டோத்தரவாதத்தின் மீது; எது எவ்வாறொனினும், இது, ஒப்புதலளிக்கப்பட்ட பொதுவான திட்டமொன்றின் கீழ் அத்தகைய நிதிக் கம்பியினை ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அலுவலர்கள் கடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தாகாது.

உ) இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் திகதியிலிருந்து, எந்தவொரு திட்டத்திற்கிணங்கவும், கம்பனியின் ஊழியரினால் அல்லது அவரின் நன்மைக்காக நிதிக் கம்பனியிலுள்ள பங்குகளை கொள்வனவு செய்வதற்காக அல்லது சந்தாதொகை செலுத்துவதற்காக.

5.2 நிதிக் கம்பனிப் பணிப்பாளரொருவருக்கு அத்துடன்/ அல்லது அத்தகைய நிதிக் கம்பனியின் பணிப்பாளரொருவருவரின் உறவினருக்கு, பிணையங்கள் பின்வரும் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யப்படுவது பற்றி திருப்திப்படுமிடத்து கீழேயுள்ள 5.3 இற்கு உட்பட்டு கடன்களை வழங்கலாம்.

அ) வங்கி உத்தரவாதமாக இருக்குமிடத்து, வழங்கப்பட்ட கடன்கள் உத்தரவாதத்தின் நூறு (100%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

ஆ) ஏதேனும் பொறுப்பு அல்லது விதிப்பு இல்லாத இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களாக இருக்குமிடத்து, வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய பிணையங்களின் முகப்புப் பெறுமதியில் அல்லது சந்தைப் பெறுமதியில் இதில் எது குறைவானதோ அதில் தொண்ணூறு (90%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது; அல்லது

இ) பரிசீலனையின் கீழுள்ள கடன் வழங்கலுக்கானவை தவிர்ந்த, எந்தவொரு பொறுப்புக்களுமின்றி நிதிக் கம்பனியில் வைப்புக்கள் வைக்கப்பட்டுள்ளவிடத்து வழங்கப்பட்ட கடன்கள் அத்தகைய வைப்புக்களில் தொண்ணூறு (90%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

5.3 எவ்வாறாயினும், மேலேயுள்ள 5.1(அ) இற்கு உட்பட்டு பணிப்பாளரொருவர் அத்துடன்/ அல்லது அத்தகைய பணிப்பாளரின் உறவினரொருவர் மேலேயுள்ள 5.2இல் உள்ள தேவைப்பாடுகளை பூர்த்திசெய்திருப்பினும்கூட கடன்களை வழங்கப்படக்கூடாது.

5.4 நிதிக் கம்பனி, கீழேயுள்ள பணிப்புரை 6இல் குறித்துரைக்கப்பட்டுள்ள வரையறைகளுக்குட்பட்டு துணைக் கம்பனிகளுக்கு அல்லது இணைக் கம்பனிகளுக்கு கடன்களை வழங்கமுடியும்.

**6. முன்மதியுடைய வரையறைகள்**

6.1 நிதிக் கம்பனியினால் வழங்கப்படக்கூடிய கடன் வழங்கலின் உயர்ந்தபட்ச தொகையானது கீழேயுள்ள பணிப்புரைகள் 7 மற்றும் 9 இற்கு உட்பட்டு

அத்தகைய நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தில் பின்வரும் சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**அ) தனிப்பட்ட கடன்பாட்டாளரின் வரையறை**

தனியொரு கடன்வழங்கலின் உயர்ந்தபட்ச தொகை அல்லது நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட கடனின் கூட்டுத்தொகை அத்துடன் தனிப்பட்ட கடன்பாட்டாளரிடமிருந்து எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் கடன்வழங்கலின் வெளிநின்ற தொகை, உடனடியாக முற்போந்த காலாண்டின் மூலதனப் போதுமைக் கூற்றில் காட்டப்பட்டவாறான அத்தகைய நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தில் பதினைந்து (15%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**ஆ) குழும கடன்பாட்டாளர்களுக்கான வரையறை**

நிதிக் கம்பனியினால் வழங்கப்பட்ட தனியொரு கடனின் உயர்ந்தபட்சத் தொகை அல்லது கடன்களின் கூட்டுத்தொகையும் எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் அத்தகைய நிதிக் கம்பனியின் ஏதேனும் குழும கடன்பாட்டாளரிடமிருந்தான கடன்களின் வெளிநிற்கின்ற தொகை உடனடியாக முற்போந்த காலாண்டின் மூலதனப் போதுமைக் கூற்றில் காட்டப்பட்டவாறான அத்தகைய நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தில் இருபது (20%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**இ) மொத்த வரையறை**

மேலே(அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடன்பாட்டாளர் வகைகள் தொடர்பில் வழங்கப்பட்டு வெளிநின்ற தொகை ஒவ்வொன்றும் உடனடியாக முற்போந்த காலாண்டின் மூலதனப் போதுமைக் கூற்றில் காட்டப்பட்டவாறு, அத்தகைய நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தில் பத்து சதவீதத்தினை (10%) விஞ்சுகின்ற தனியாள் கடன்களும் வெளிநின்ற தொகையையும் உடனடியாக முற்போந்த காலாண்டில் உள்ளவாறான அத்தகைய நிதிக் கம்பனியின் கடன்களின் மொத்த வெளிநின்ற தொகையில் ஐம்பது (50%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

6.2 வழங்கப்பட்டு வெளிநின்ற பிணையிடப்படாத கடன்களின் மொத்தத் தொகையும் எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் அனைத்து கடன்பாட்டாளர்களிடமிருந்தான வெளிநின்ற தொகையும் உடனடியாக முற்போந்த காலாண்டின் மூலதனப் போதுமைக் கூற்றில் காட்டப்பட்டவாறு, அத்தகைய நிதிக் கம்பனியின் மைய மூலதனத்தில் இருபது (20%) சதவீதத்தினை விஞ்சக்கூடாது.

**7. முன்மதியுடைய வரையறைகளிலிருந்து விலக்கப்பட்ட கடன் வசதிகள்**

7.1 மேலேயுள்ள பணிப்புரை 6 இன்கீழ், கடன்களின் உயர்ந்தபட்சத் தொகையினை கணிக்கும் போது;

அ) கீழே காட்டப்பட்டுள்ள பிணைகளுக்கெதிராக கடன்பாட்டாளர்/ கடன்பாட்டாளர்களுக்கு கொடுகடன் வசதிகள் வழங்கப்படுமிடத்து, அத்தகைய பிணையுறுதிகளின் பெறுமதியினை தொடர்பான கடன் வசதிகளிலிருந்து கழிக்கலாம்.

i. உரிமம்பெற்ற வங்கியொன்றில் அல்லது உரிமம்பெற்ற நிதிக் கம்பனியொன்றிலுள்ள ஏதேனும் பொறுப்புக்கள் அல்லது விதிப்புக்களற்ற வைப்புக்கள்;

ii. இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் ஏதேனும் பொறுப்புக்கள் அல்லது விதிப்புக்களற்ற பிணையங்கள்; மற்றும்

iii. வங்கி உத்தரவாதங்கள்.

ஆ) இலங்கை அரசாங்கத்தின் அல்லது இலங்கை மத்திய வங்கியின் பிணையங்களிலுள்ள முதலீடுகளை கடன்களிலிருந்து கழிக்கமுடியும்.

**8. இடைக்கால ஏற்பாடுகள்**

8.1 மேலேயுள்ள பணிப்புரை 6இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் முன்மதியுடைய வரையறைகளில் செய்யப்படுகின்ற திருத்தங்கள் காரணமாக விஞ்சப்படும் சந்தர்ப்பங்களில், கடன்வசதி இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் நாளிலிருந்து ஓராண்டிற்குள் குறைக்கப்படுதல் வேண்டும்.

**9. வரைவிலக்கணங்கள்**

9.1 இப்பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக பின்வரும் வரைவிலக்கணங்கள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

அ) ‘‘கடன் வசதிகள்’’ என்பது கடன்கள்; தவணைக் கொள்வனவு அல்லது குத்தகை உடன்படிக்கைகளின் கீழான வசதிகள்; முறிகள், தொகுதிக்கடன்கள், சொத்துக்களின் உத்தரவாதத்தினைக் கொண்ட பிணையங்கள், வர்த்தகப்பத்திரங்கள்/ வாக்குறுதிச் சான்றிதழ்கள் என்பனவற்றினூடான நிதிகளின் ஏற்பாடுகள்; எதிர்பாராத பொறுப்பொன்றினை ஏற்றுக்கொள்வதற்கான கடப்பாடுகள் உட்பட, ஏதேனும் கடன்கள் அல்லது முற்பணங்கள் அல்லது அத்தகைய வேறு வசதிகளை வழங்குவதற்கான ஏதேனும் கடப்பாடுகள் போன்ற அனைத்து ஐந்தொகைக்கும் வெளியேயான கடன் வழங்கல்கள் அல்லது பணிப்பாளர்களினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான மற்றைய நிதியியல் வசதி போன்றன எனப் பொருள்படும்.

ஆ) ‘‘கடன் வசதிகளின் தொகை’’ என்பது ஐந்தொகையிலுள்ள கடன் வசதிகளினதும் ஐந்தொகைக்கு வெளியேயான கடன் வசதிகளினதும் மொத்தம் எனப் பொருள்படும்.

i. ‘‘ஐந்தொகையிலுள்ள கடன் வசதிகளின் தொகை’’ என்பது எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் நிலவுகின்ற கடன் வசதிகளினது வரையறைகளின் மொத்த அல்லது அனைத்து கடன் வசதிகளினதும் வெளிநிற்கும் மொத்தத்தில் எது உயர்வானதோ அது எனப் பொருள்படும்.

ii. ‘‘ஐந்தொகைக்கு வெளியேயான கடன் வசதிகளின் தொகை’’ என்பது எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் நிலவுகின்ற கடன் வசதிகளினதும் வரையறைகளின் மொத்தத்திற்கும் சமமான கடன் தொகை அல்லது ஐந்தொகை கடன்வழங்கலின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கடன் வசதிகளின் எடுப்பனவு செய்யப்படாத

தொகை நீங்கலான கடன் வசதிகளின் வெளிநின்ற தொகையில், எது உயர்வானதோ அதுவாகும்.

இ) ‘‘இணைக் கம்பனி’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ள அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஈ) ‘‘தொடர்புபட்ட தரப்பினர்’’ என்பது குறைந்தபட்சம் பின்வரும் பிரமாணத்தில் ஒன்றினை திருப்தி செய்திருக்கின்ற தொடர்புபட்ட தரப்பினர்களின் குழுமமாக இருக்கக்கூடியவர்கள் என கருதப்படக்கூடிய இரண்டு அல்லது அதற்கும் கூடுதலான இயற்கையான அல்லது சட்டபூர்வமான ஆட்கள் எனப் பொருள் கொள்ளப்படல் வேண்டும்.

i. கட்டுப்படுத்தும் தொடர்பு முறை: இணைத்தரப்பினர்களில் ஒருவர் மற்றைய ஒருவரின் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதாகும். கட்டுப்பாட்டினை பின்வருமாறு கண்டறியமுடியும்.

அ) வாக்களிக்கின்ற உரிமைகளின் கட்டுப்பாடு

ஆ) மூத்த முகாமைத்துவத்தின் மீது கணிசமமான செல்வாக்கு

ii. பொருளாதார ரீதியாக ஒன்றிலொன்று தங்கியிருக்கும் தன்மை: இணைத்தரப்பினர்களில் ஒரு தரப்பினர் நிதியியல் பிரச்சனைகளை குறிப்பாக நிதியிடல் அல்லது மீள்கொடுப்பனவு இடர்பாடுகளை கொண்டிருப்பாராயின் அதன்விளைவாக மற்றையவர்களும் நிதியிடல் அல்லது மீள்கொடுப்பனவு இடர்பாடுகளை எதிர்நோக்கக்கூடும்.

உ) ‘‘மைய மூலதனம்’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதே கருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஊ) ‘‘ஐந்தொகைக்கு வெளியேயான கடன்வசதிகளுக்குச் சமமான கொடுகடன் தொகை’’ என்பது மூலதனப் போதுமை விகிதத்தின் கணிப்பில் ஐந்தொகைக்கு வெளியேயான கடன் வசதிகளுக்கு ஏற்புடைத்தான கொடுகடன் மாற்றுக் காரணிகளை பயன்படுத்தி கணிக்கப்பட்ட கொடுகடனுக்குச் சமமான தொகை எனப் பொருள்கோடப்படல் வேண்டும்.

எ) ‘‘பணிப்பாளர்’’ என்பது நிதிக் கம்பனியொன்றின் பணிப்பாளராக இருக்கின்ற ஒருவர் என குறித்துரைக்கப்பட்டிருந்தாலொழிய, இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்தின் பணிப்பாளர் எனப் பொருள்கொள்ளப்படல் வேண்டும்.

ஏ) ‘‘கடன்பாட்டாளர்கள் குழு’’ என்பது பின்வருவனவற்றின் கூட்டு எனப் பொருள்கோடப்படுதல் வேண்டும்.

i. தனிப்பட்ட ஒருவர், அவரின் உறவினர், அவர் அல்லது அவரின் உறவினர் கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள கம்பனியொன்று அல்லது நிறுவனமொன்று;

ii. கம்பனியொன்று அத்துடன் பின்வருவனவற்றுள் ஒன்று அல்லது அதற்கும் கூடுதலானது:

அ) இதன் உடமைக் கம்பனி அல்லது இறுதியான தாய்க் கம்பனி;

ஆ) இதன் துணைக் கம்பனி;

இ) இதன் கூட்டுத்தொழில் முயற்சி;

ஈ) இதன் இணைக் கம்பனி

உ) இதன் உடமைக் கம்பனியின் துணை அல்லது இணைக் கம்பனி

ஊ) அத்தகைய கம்பனி அல்லது அதன் துணைக் கம்பனி அல்லது அதன் உடமைக் கம்பனி அல்லது அதன் கூட்டுத்தொழில்முயற்சி அல்லது உடமைக் கம்பனியொன்றின் இணைக் கம்பனி அல்லது துணைக் கம்பனி கணிசமான நலவுரித்துக்களைக் கொண்டுள்ள கம்பனியொன்று.

ஐ) ‘‘உடமைக் கம்பனி’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒ) ‘‘தனிப்பட்ட கடன்பாட்டாளர்’’ என்பது தனியொரு கம்பனி, பொதுக் கூட்டுத்தாபனம், நிறுவகம், ஆட்கள் அல்லது இயற்கையான நபர் சங்கம் எனப் பொருள்படும்.

ஓ) ‘‘கடன்’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஔ) ‘‘உறவினர்’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

க) ‘‘துணைக் கம்பனி’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ங) ‘‘கணிசமான அக்கறை’’ என்பது 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 74ஆம் பிரிவிலுள்ளவாறான அதேகருத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**10. பணிப்புரைகளை இரத்துச்செய்தல்**

10.1 இப்பணிப்புரை நடைமுறைக்குவரும் நாளிலிருந்து பின்வரும் பணிப்புரைகள் இரத்துச்செய்யப்படவுள்ளன.

அ) 1991ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பதிவழிக்கப்பட்ட கடன்களின் பதிவேட்டு) பணிப்புரை

ஆ) 2006ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (தனியொரு கடன்பாட்டாளர் வரையறை) பணிப்புரை;

இ) 2007ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன் வழங்கல்) பணிப்புரை

ஈ) 2007ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (பணிப்பாளர் மற்றும் அவர்களுடைய உறவினர்களுடனான வியாபார கொடுக்கல்வாங்கல்கள்) பணிப்புரை; மற்றும்

உ) 2013ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க நிதிக் கம்பனிகள் (கடன்வழங்கல் வசதி பதிவழித்தல்) பணிப்புரை

**ஒப்பம்**

**முனைவர். பி. நந்தலால் வீரசிங்க**

ஆளுகைச் சபையின் தலைவர் மற்றும்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்